ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.5 – வெருவாதாள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.5 – வெருவாதாள்

‡ வெருவாதாள் வாய் வெருவி ⋆
வேங்கடமே ! வேங்கடமே ! என்கின்றாளால் ⋆
மருவாளால் என் குடங்கால் ⋆
வாள் நெடுங்கண் துயில் மறந்தாள் ⋆
வண்டார் கொண்டல் உருவாளன் வானவர் தம் உயிர் ஆளன் ⋆
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட திருவாளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் சிந்திக்கேனே ‖ **5.5.1** ‖

கலை ஆளா அகல் அல்குல் ⋆
கன வளையும் கை ஆளா என் செய்கேன் நான் ⋆
விலை ஆளா அடியேனை ⋆
வேண்டுதியோ வேண்டாயோ என்னும் ⋆
மெய்ய மலை ஆளன் வானவர் தம் தலை ஆளன் ⋆
மராமரம் ஏழ் எய்த வென்றிச் சிலை ஆளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் சிந்திக்கேனே ‖ **5.5.2** ‖

மான் ஆய மென் நோக்கி ⋆
வாள் நெடுங்கண் நீர் மல்கும் வளையும் சோரும் ⋆
தேன் ஆய நறுந் துழாய் அலங்கலின் திறம் பேசி ⋆
உறங்காள் காண்மின் ⋆
கான் ஆயன் கடி மனையில் தயிர் உண்டு நெய் பருக ⋆

நந்தன் பெற்ற ஆன் ஆயன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
அம்மனைமீர் ! அறிகிலேனே ॥ **5.5.3** ॥

தாய் வாயில் சொற் கேளாள் ⋆
தன் ஆயத்தோடணையாள் தட மென் கொங்கையே ⋆
ஆரச் சாந்தணியாள் ⋆
எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும் ⋆
பேய்மாய முலை உண்டிவ் உலகுண்ட ⋆
பெரு வயிற்றன் பேசில் நங்காய் ⋆
மா மாயன் என் மகளைச் செய்தனகள் ⋆
மங்கைமீர் ! மதிக்கிலேனே ॥ **5.5.4** ॥

பூண் முலை மேல் சாந்தணியாள் ⋆
பொரு கயல் கண் மை எழுதாள் பூவை பேணாள் ⋆
ஏண் அறியாள் எத்தனையும் ⋆
எம் பெருமாந் திருவரங்கம் எங்கே என்னும் ⋆
நாண்மலராள் நாயகனாய் ⋆
நாம் அறிய ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி ⋆
ஆண் மகனாய் என் மகளைச் செய்தனகள் ⋆
அம்மனைமீர் ! அறிகிலேனே ॥ **5.5.5** ॥

தாதாடு வனமாலை ⋆
தாரானோ என்றென்றே தளர்ந்தாள் காண்மின் ⋆
யாதானும் ஒன்றுரைக்கில் ⋆
எம் பெருமான் திருவரங்கம் என்னும் ⋆
பூமேல் மாதாளன் குடம் ஆடி மதுசூதன் ⋆
மன்னர்க்காய் முன்னம் சென்ற தூதாளன் ⋆

என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் சொல்லுகேனே ॥ **5.5.6** ॥

வார் ஆளும் இளங்கொங்கை ⋆
வண்ணம் வேறாயினவாறெண்ணாள் ⋆
எண்ணில் பேர் ஆளன் பேர் அல்லால் பேசாள் ⋆
இப் பெண் பெற்றேன் என் செய்கேன் நான் ⋆
தார் ஆளன் தண் குடந்தை நகர் ஆளன் ⋆
ஐவர்க்காய் அமரில் உய்த்த தேர் ஆளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் செப்புகேனே ॥ **5.5.7** ॥

உறவாதும் இலள் என்றென்று ⋆
ஒழியாது பலர் ஏசும் அலர் ஆயிற்றால் ⋆
மறவாதே எப்பொழுதும் ⋆
மாயவனே ! மாதவனே ! என்கின்றாளால் ⋆
பிறவாத பேர் ஆளன் பெண் ஆளன் மண் ஆளன் ⋆
விண்ணோர் தங்கள் அறவாளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
அம்மனைமீர் ! அறிகிலேனே ॥ **5.5.8** ॥

பந்தோடு கழல் மருவாள் ⋆
பைங்கிளியும் பால் ஊட்டாள் பாவை பேணாள் ⋆
வந்தானோ திருவரங்கன் ⋆
வாரானோ என்றென்றே வளையும் சோரும் ⋆
சந்தோகன் பௌழியன் ⋆
ஐந் தழல் ஓம்பு தைத்திரியன் சாமவேதி ⋆

அந்தோ ! வந்தென் மகளைச் செய்தனகள் ⋆
அம்மனைமீர் ! அறிகிலேனே ॥ **5.5.9** ॥

‡ சேல் உகளும் வயல் புடை சூழ் ⋆
திருவரங்கத்தம்மானைச் சிந்தை செய்த ⋆
நீல மலர்க் கண் மடவாள் நிறை அழிவைத் ⋆
தாய் மொழிந்த அதனை ⋆
நேரார் கால வேல் பரகாலன் ⋆
கலிகன்றி ஒலி மாலை கற்று வல்லார் ⋆
மாலை சேர் வெண் குடைக்கீழ் மன்னவராய்ப் ⋆
பொன் உலகில் வாழ்வர் தாமே ॥ **5.5.10** ॥

அடிவரவு — வெருவாதாள் கலை மான் தாய் பூண் தாதாடு வாராளும் உறவு பந்தோடு சேல் கைம்மானம்

வெருவாதாள் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்